திரு. த. சோனையா : தலைவரவர்களே, சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையிலே இருக்கிற அரசாங்க எர்ஸ்கின் ஆஸ்பிடல் இருக்கிறது. அங்கே கை, கால் இழந்தவர்களுக்கு இந்த மாதிரி செயற்கை உறுப்புகளைச் செய்து, அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு உதவி செய்யும் வகையில் அங்கே ஒரு நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போதே அங்கே சப்-செண்டர் துணை நிலையம் என்ற வகையில் இருக்கிறது. அது எதிர் காலத்தில் முதல் நிலையமாக உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

Ambulance Vans

*689 Q.—THIRU R. R. MUNUSAMY : Will the Hon. the Minist r for Health be pleased to state—

(*a*) the total number of ambulance vans in the Medical College Hospitals in Madras City ; and

(*b*) the steps taken to increase the number ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ & இ) : பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, தலைநகரங்களில் அவசர ஊர்தி இருப்பதைப்போல், வட்டங்களிலும் அமைக்க அரசு முன் வருமா ? பொதுவாக நகரங்களில் பஸ் வசதி, மற்ற வாகன வசதி இருக்கும்போதே இப்படிப்பட்ட அவசர ஊர்திகள் வைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, செஞ்சி வட்டம் 30 மைல் பரப்பளவில் இருக்கிறது. அங்கேயிருக்கிற மக்கள் அவசரமாக மருத்துவ மனைக்கு வரவேண்டுமென்றால் அதற்கு ஊர்தி வசதி இல்லை. அந்தப் பகுதியில் பஸ் வசதியும் சரியாக இல்லை. ஆகவே, அந்த செஞ்சி வட்டத்திற்கு, இப்படிப்பட்ட வளர்ச்சியில்லாத இடங்களில் ஊர்தி ஏற்படுத்தித் தந்தால் நாட்டு மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்து அந்த வட்டங்களில் ஏற்படுத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு உணரவில்லை என்று அங்கத்தினர் கருதக்கூடாது. அரசு உணர்ந்து பார்த்து, பார்த்து செய்ய முடியாது என்ற அளவுக்கு நிதிநிலை இருப்பதால் செய்யவில்லை. இப்போதுள்ள பெரிய தாலூக்கா மருத்துவ மனைகளிலேயே இந்த மாதிரி ஊர்தி வசதி இல்லை. ஒரு வண்டி வாங்க ஏறத்தாழ ரூ. 40,000, ரூ. 50,000 செலவாகிறது. அதற்குப் பின்னால் நடைமுறைச் செலவு ரூ. 40,000, ரூ, 50,000 என்று வருடத்திற்கு ஆகிறது. அதற்கு ஏற்ற அளவுக்கு அங்கே நோயாளிகள், படுக்கை வசதி போன்றவை, அவசர நிலைமைகள் எல்லாம் இருக்க வேண்டும். அப்படி இல்லாத இடங்களில் இவ்வளவு பொருள் செலவு செய்வது என்பது சரியல்ல. சென்னை நகரத்திலேயே பல மருத்துவ மனைகளில் பல முன்னேற்றங்கள் போதிய நிதி வசதி இல்லாததால் செய்யப்படாமல் இருக்கிறது.

@—288ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.